பூங்குயிலாய்ப் பாடித் தீஞ்சுவை இசைத்தேனை ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாதளித்துவரும் கானக் கலை அரசி திருமதி சுதா ரகுநாதன்

இசைவானில் மின்னும் தாரகையாய் மிளிர்ந்த இசைக் கலைவாணி திருமதி. எம்.எல். வசந்தகுமாரி அவர்களிடம் முறையாக இசை பயின்று நிறைவாக நெஞ்சங்களைத் தன் இசையால் குளிர வைக்கும் சுதா ரகுநாதன் ஒரு முன்னணி இசைக் கலைஞர்.

இனிய குரல்வளம் மிகுந்த சுதாவின் இராக ஆலாபனை சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி. கையாளும் கீர்த்தனையை அடுக்கடுக்கான சங்கதிகளுடன் அழகுப் படுத்திப் பாடும் செம்மை, பொருள் புரிந்து பாடும் அருமை, பாடலின் தன்மைக்கேற்ற பாவம், பொருத்தமான இடத்தில் ராக பாவம், தாள வின்யாசம் துலங்கப் பாடும் நிரவல், அதன் பின் கலைக் கோலமாக, வற்றாத ஜீவநதியாக, பாய்ந்து வரும் சுர நேர்த்தி சொல்லில் அடங்காத செம்மை நலங்கள்.

சுதா அவர்களின் உழைப்பு அவரின் பாட்டில் பளிச்சிடும். தன் இசையரங்க நிகழ்ச்சியைத் திட்டமிட்டுத் தொய்வின்றி ரசிகர்கள் மனங்குளிர இதோ இதோ எனப் படைத்தளிப்பவர். இவரிடம் பிடித்த அம்சம், எதையும் ஏனோதானோ என்று செய்யமாட்டார். ராகம் என்றாலும், கீர்த்தனை என்றாலும், சுரம் என்றாலும் அதன் பரிபூரணத்துவத்தை எட்டி விட வேண்டும் என்ற அவாவுடன் முயலும் மனப்பக்குவம்.

மலையில் ஊற்றெடுக்கும் அருவியாகப் பாய்ந்து வரும் சுதாவின் இசை வெள்ளம் பாரெங்கும் பாய்ந்து -